DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.28 /2021**

**CNR.No: TNTH06-000046 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகனலட்சுமி | Town | பண்ணைப்புரம் |
| Father's Name | : மாரிமுத்து | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :29.08.2024

<u>**வாதி நிர்மலாசிவாஜி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**</u>

**1)** 27.07.2020ம் தேதி நானும், ஆனந்தசிவாஜியும் சேர்ந்து காவல்நிலையத்தில் அளித்த வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதிலும், அது சான்றாவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். எனது கணவர் பெயரிலுள்ள சொத்திற்கு பாதையில்லாததால் வேறுயாரும் அச்சொத்தை வாங்க முன்வராததாலும், எனது மருமகன் முத்துக்குமார் பெயரில் மோசடியாக ஒரு பத்திரத்தை ஏற்படுத்தி அவர் மூலமாக நிர்மலாசிவாஜிக்கு அச்சொத்தை விற்பதற்கு நான் முயற்சிக்கிறேன் என்றால் அது உண்மையல்ல.

2) நிர்மலாசிவாஜி எப்போதாவது கரியணம்பட்டியில் குடியிருந்துள்ளரா என்றால் குடியிருந்ததில்லை. எனது மருமகன் முத்துக்குமார் சென்னையில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். வாசாஆ15 ஆவணத்தில் நிர்மலாசிவாஜி பெயருக்கான முகவரி கரியணம்பட்டி கிராமம் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கு பிரச்சனை குறித்து எனது கணவர் தான் 2019ம் ஆண்டு வரை இறக்கும்வரை பராமரித்து வந்தார், அதன்பிறகு எனது மருமகன் தான் வழக்கு பிரச்சனைகளை பார்த்து வருகிறார், அவருக்குத்தான் இந்த விவரம் தெரியும்.

3) எனது மருமகன் சென்னை நகர்ஊரக அமைப்புத்துறை

உதவிஇயக்குநர் அலுவலகத்தில் நிர்மலாசிவாஜி போன்று கையொப்பம் செய்து அவரது முகவரியை மாற்றிவிட்டதாக குறிப்பிட்டு 01.08.2018 ம் தேதி ஒரு கடிதம் அளிக்கப்பட்டது என்றாலும், அதனை பயன்படுத்தித்தான் வாசாஆ 15 கடிதமானது அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். வாசாஆ 1, வாசாஆ 16 ஆகிய ஆவணங்கள் உண்மையாக இருக்கும்பட்சம் எனது கணவரே நிர்மலாசிவாஜி மீது உரிய காலத்திற்குள் உரிய பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றாலும் சரியல்ல.

4) எனது எதிர்கோருரிமை வழக்கில் சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. நான் எதிர்கோருரிமை வழக்கின் சங்கதிகளுக்கு முரணாக பரிகாரம் கோரியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்கோருரிமை வழக்கில் எனது பிள்ளைகளும் அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வழக்குரைச்சொத்து நிர்மலா சிவாஜிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதனைப்பொறுத்து உரிமைமாற்றம் செய்வதற்கு நிர்மலாசிவாஜிக்கு முழு உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்குரை சொத்தை நிர்மலாசிவாஜி வில்லங்கம் செய்துள்ளதை ஆட்சேபிக்க எந்த உரிமையும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமை வழக்கு அதிகபட்ச செலவு தொகையும் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**(வாதி நிர்மலாசிவாஜி தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

**(2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.